

ஆத்தூர் தொகுதியில் சமுதாயக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை உருவாகி உள்ளது என்று கசவனம்பட்டி ஊராட்சி கரட்டுப்பட்டியில் நடைபெற்ற சமுதாயக்கூட திறப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி, பெருமிதமாக பேசியதோடு தனது சொந்தசெலவில் ரூ.50 லட்சம் மதிப்பில் கரட்டுப்பட்டி பாலமுருகன் திருக்கோவில் வளாகத்தில் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். அருகில் ஒன்றிய செயலாளர் ப.க.சிவகுருசாமி, கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.



விருதுநகர் தெற்கு மாவட்டம் அருப்புக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் சட்ட மன்ற தேர்தல் பணிகள் குறித்து விளக்கி பேசினார். கூட்டத்தில் முன்னாள் எம். எல்.ஏ விஜயக்குமார், முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் , பொதுக்குழு உறுப்பினர் சிவப்பிரகாசம், மாநில நெசவாளர் அணி செயலாளர் பழனிச்சாமி, பாபு, சோலையப்பன், முத்துமாரி, பார்த்திபன், திருத்தணி முருகன், கணேசன், பெரியசாமி, ஆசைதம்பி, கார்த்திகேயன், சிவசங்கரன், அன்பழகன், கண்ணன், பாபுஜி உட்பட நகர்மன்ற உறுப்பினர்கள், நகர தி.மு.க. நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# ஆத்தூர் தொகுதியில் சமுதாயக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இல்லை!

## கசவனம்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், மே.30-

ஆத்தூர் தொகுதியில் சமுதாயக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை உருவாகி உள்ளது என்று கசவனம்பட்டி ஊராட்சி கரட்டுப்பட்டியில் நடைபெற்ற சமுதாயக்கூட திறப்பு விழாவில் அமைச்சர் ஐ. பெரியசாமி ரூ.50 லட்சம் மதிப்பில் கரட்டுப்பட்டி பாலமுருகன் திருக்கோவில் வளாகத்தில்; கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கசவனம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கரட்டுப்பட்டி கிராம மக்கள் தங்கள் பகுதியில் உள்ள ஸ்ரீபாலமுருகன் திருக்கோவில் வளாகத்தில் சமுதாயக்கூடம் வேண்டும் என அமைச்சரிடம் கோரிக்கை மனுவை கொடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று ஊரக வளர்ச்சி துறை



அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ரூ.50 லட்சம் மதிப்பில் தனது சொந்த செலவில் புதிய சமுதாய கூடத்தை கட்டிக்கொடுக்க உறுதியளித்திருந்தார். அதன்படி கட்டப்பட்ட சமுதாயக்கூட திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு ரெட்டியார் சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார்.

தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், துணை தலைவர் கீதா முருகானந்தம் ,மாவட்ட பிரதிநிதி பெருமாள்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன் வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிராம மக்கள் ஆரத்தி எடுத்து கும்ப மரியாதையுடன் பரிவட்டம் கட்டி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதன்பின்னர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மண்டபத்தை திறந்து வைத்து பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசியதாவது.

இன்று என் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விழா நடைபெற்று உள்ளது. காரணம் இப்பகுதியில் உள்ள முருகன் கோவிலில் திருமணம் மற்றும் இதர விழாக்களை நடத்துவதுடன் தங்களுக்கு மண்டபம் வசதி வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு இன்று பயன்பாட்டிற்காக திருமண மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை, எளிய மக்கள் குறைந்த செலவில் தங்கள் விழாக்களை நடத்த முடியும் என்றார். குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் அனைத்துகிராமங்களிலும் சமுதாய கூடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர தேவைப்படும் கிராமங்களுக்கு பகுதி நேர நியாய விலைக் கடைகள், நாடக மேடைகள், கட்டிக்கொடுக்கப்படும் என்றார். இப்பகுதியில் ஒப்பந்தகாரர் பொன் முருகன் சிறந்த முறையில் தரமான கட்டிடத்தை கட்டிக்கொடுத்துள்ளார். சமுதாயக்கூடத்தின் மேலே உணவு அருந்தும் அறையும், இதர அறைகளும் கட்டிக்கொடுக்கப்படும் என்றார். விழாவில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.சக்தி, கரிசல்பட்டி தலைவர் பால்ராஜ், கசவனம்பட்டி துணைத் தலைவர் கே.செல்வம், கரிசல்பட்டி ஜோசப் ஆசான், கசவனம்பட்டி கிளை செயலாளர் முருகவேல், ஊர் நாட்டாண்மை காளியப்பன், ஊர் முக்கிய பிரமுகர்கள் மல்லையகவுண்டர், சீதாராமன், பாலமுருகன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் முருகானந்தம், ஒன்றிய ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் தங்க பாண்டி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மத்திய மாவட்டம்

### அம்மாபேட்டை மத்திய, அம்மாபேட்டை தெற்கு - பெருந்துறை மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் ஈரோடு மத்திய மாவட்டத்தில் அம்மாபேட்டை வடக்கு, தெற்கு ஒன்றியத்தில் பவானி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகள் மறுசீரமைக்கப்பட்டு புதிய ஒன்றியமாகவும்; சென்னிமலை வடக்கு ஒன்றியத்தில் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகள் மறுசீரமைக்கப்பட்டு புதிய கழக ஒன்றியமாகவும் பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்களை கொண்டதாக அமையும்.

**அம்மாபேட்டை மத்திய ஒன்றியம் :** 1. குருவரெட்டியூர், 2.கன்னப்பள்ளி, 3. முகாசிபுதூர், 4. பட்லூர், 5. அட்டவணைபுதூர், 6. பூதப்பாடி ஆகிய 6 ஊராட்சிகள் மற்றும் அம்மாபேட்டை, நெரிஞ்சிப்பேட்டை ஆகிய இரண்டு பேரூர்கள்.

**அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம் :** 1. ஒட்டபாளையம், 2. பூனாச்சி, 3.காடப்பநல்லூர், 4. கல்பாவி, 5. கேசரிமங்கலம், 6. குறிச்சி, 7.மாணிக்கம்பாளையம், 8. சிங்கம்பேட்டை, 9. படவல்கால்வாய் ஆகிய 9 ஊராட்சிகள் மற்றும் ஒலகடம் பேரூர்.

**பெருந்துறை மத்திய ஒன்றியம் :** 1. பனியம்பள்ளி, 2. ஈங்கூர், 3.வரப்பாளையம், 4. கூத்தம்பாளையம், 5. சிறுக்களஞ்சி, 6. வாய்ப்பாடி ஆகிய 6 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **அம்மாபேட்டை மத்திய, அம்மாபேட்டை தெற்கு, பெருந்துறை மத்திய** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**அம்மாப்பேட்டை மத்திய ஒன்றியம் :** பொறுப்பாளர் : **அசோக்குமார்,** ஈரோடு மாவட்டம்.
**அம்மாப்பேட்டை தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எம்.ஈஸ்வரன்,** ஈரோடு மாவட்டம்.
**பெருந்துறை மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : **டி.பி.கனகராஜ்,** ஈரோடு மாவட்டம்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 28.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தஞ்சை வடக்கு மாவட்டம்

### திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியம் திருவிடைமருதூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியம், திருவிடைமருதூர் பேரூர்க் கழகச்செயலாளர்சுந்தரஜெயபால்திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. இரா.கோபாலகிருஷ்ணன்,** (தெற்கு எடத் தெரு, திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம்.) அவர்கள் திருவிடைமருதூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 28.5.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திருச்சி வடக்கு மாவட்டம்

### தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, தாத்தையங்கார்பேட்டை மேற்கு, துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, முசிறி மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, மேற்கு, துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, மற்றும் மேற்கு ஆகிய ஒன்றியங்கள் மறு சீரமைக்கப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கபட்ட தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, **தாந்தையங்கார்பேட்டை மேற்கு துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, முசிறி மேற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**தாத்தையங்கார்பேட்டை கிழக்கு ஒன்றியம் :** 1. காமாட்சிப்பட்டி, 2. வெள்ளூர், 3. செவந்தலிங்கபுரம், 4. தண்டபுத்தூர், 5. மாவிலிப்பட்டி, 6. எம்.புதுப்பட்டி, 7. முத்தம்பட்டி, 8. பைத்தம்பாறை, 9. சிட்டிலரை, 10. ஊரக்கரை, 11. வளையெடுப்பு ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப்பாளையம் ஆகிய 2 பேரூர்கள்.

**தாத்தையங்கார்பேட்டை மேற்கு ஒன்றியம் :** 1. அஞ்சலம், 2. ஆராய்ச்சி, 3. தேவானூர், 4. ஜம்புமடை, 5. காருகுடி, 6. கரிகாலி, 7. கோணப்பம்பட்டி, 8. மகாதேவி, 9. பிள்ளாபாளையம், 10. பூலாஞ்சேரி, 11. சேருகுடி, 12. சூரம்பட்டி, 13. தும்பலம், 14. ஊருடையாபட்டி, 15. வாளசிராமணி ஆகிய 15 ஊராட்சிகள்

**துறையூர் கிழக்கு ஒன்றியம் :** 1. அபினிமங்கலம், 2. ஆதனூர், 3.அம்மாபட்டி, 4. வண்ணாடு, 5. கீரம்பூர், 6. கோம்பை, 7. கோட்டாத்தூர், 8. முத்தையம்பாளையம், 9. சொரத்தூர், 10. நடுவலூர், 11. குன்னுப்பட்டி, 12. நாகலாபுரம், 13. பகளவாடி, 14. புத்தானம்பட்டி, 15. வெள்ளக்கல்பட்டி, 16. வரதராஜபுரம் ஆகிய 16 ஊராட்சிகள்.

**முசிறி கிழக்கு ஒன்றியம் :** 1. கரட்டாம்பட்டி, 2. காட்டுக்குளம், 3. மண்பறை, 4. மூவானூர், 5. பெரமங்கலம், 6. புலிவலம், 7. சாத்தனூர், 8. திண்ணனூர், 9. திருத்தலையூர், 10. டி.புதுப்பட்டி, 11. வெளியனூர், 12. திருத்தியமலை, 13. வேங்கைமண்டலம் ஆகிய 13 ஊராட்சிகள்.

**முசிறி மேற்கு ஒன்றியம் :** 1. ஆமூர், 2. அய்யம்பாளையம், 3. ஏவூர், 4. குணசீலம், 5. ஜெயங்கொண்டான், 6. கொடுந்துறை, 7. கோமங்கலம், 8. மங்களம், 9. நெய்வேலி, 10. பேரூர், 11. சித்தாம்பூர், 12. சுக்காம்பட்டி, 13. திண்ணக்கோனம், 14. துலையாநத்தம், 15. வாளவந்தி ஆகிய 15 ஊராட்சிகள்

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **தாத்தையங்கார்பேட்டை கிழக்கு, தாந்தையங்கார்பேட்டை மேற்கு, துறையூர் கிழக்கு, முசிறி கிழக்கு, முசிறி மேற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தாத்தையங்கார்பேட்டை கிழக்கு ஒன்றியம்:**
பொறுப்பாளர் : **கே.கே.ஆர். சேகரன்,** திருச்சி மாவட்டம்.
**தாத்தையங்கார்பேட்டை மேற்கு ஒன்றியம்:**
பொறுப்பாளர் : **க. பெரியசாமி,** திருச்சி மாவட்டம்
**துறையூர் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **சி. சரவணன்,** திருச்சி மாவட்டம்.
**முசிறி கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ். கணேசன்,** திருச்சி மாவட்டம்.
**முசிறி மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **சு. ராமச்சந்திரன்,** திருச்சி மாவட்டம்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 28.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

### ஆரணி மத்திய ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக் குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தில் உள்ள செய்யாறு மேற்கு ஒன்றியத்தில் இருந்து ஆரணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 12 ஊராட்சிகளைக் கொண்டு ஆரணி மத்திய ஒன்றியம் பிரிக்கப்பட்டு புதிய கழக பொறுப்பாளர் நியமிக்கப்படுகிறார்.

செய்யாறு மேற்கு ஒன்றியமானது மீதமுள்ள செய்யாறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 16 ஊராட்சிகளைக் கொண்டு தொடர்ந்து செயல்படும்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியம் பின்வரும் ஊராட்சிகளைக் கொண்டதாக அமையும்.

**ஆரணி மத்திய ஒன்றியம் :** 1. மாளிகைபட்டு, 2. பில்லாந்தி, 3.கடுகனூர், 4. கொருக்காத்தூர், 5. விண்ணமங்கலம், 6. மேல்நாகரம்பேடு, 7.முனுகப்பட்டு, 8.மேல்சீசமங்கலம், 9.பலாந்தாங்கல், 10. நாவல்பாக்கம், 11. புதுக்கோட்டை, 12. திருமணி ஆகிய 12 ஊராட்சிகள்.

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **ஆரணி மத்திய ஒன்றியக்** கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, **திரு.சு.ராஜ்குமார்** அவர்கள் ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 28.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## பெரம்பலூர் மாவட்டம்

### வேப்பூர் கிழக்கு, வேப்பூர் மேற்கு, வேப்பூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பூர் தெற்கு மற்றும் வேப்பூர் வடக்கு ஆகிய இரண்டுஒன்றியங்களைமூன்றாகபிரித்து, அவ்வாறுபிரிக்கப்பட்டஒன்றியங்களுக்கு புதிய கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**வேப்பூர் கிழக்கு ஒன்றியம் :** 1.அகரம்சீகூர் 2. ஆண்டிக் குரும்பலூர் 3. கீழபெரம்பலூர் 4. கிழுமத்தூர் 5. ஒலைப்பாடி 6. பரவாய் 7. துங்கபுரம் 8. வடக்கலூர் 9. வசிஷ்டபுரம் 10.வயலப்பாடி ஊராட்சி ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் இலப்பை குடிக்காடு பேரூர்.

**வேப்பூர் மேற்கு ஒன்றியம் :** 1. சு.ஆடுதுறை 2. அத்தியூர் 3. கீழபுலியூர் 4. நன்னை 5. ஒகளூர் 6. பென்னகோணம் 7. பெருமத்தூர் 8.சிறுமத்தூர் 9. திருமாந்துறை ஊராட்சி ஆகிய 9 ஊராட்சிகள்.

**வேப்பூர் தெற்கு ஒன்றியம் :** 1. பேரளி 2. சித்தளி 3. அசூர் 4. ஓதியம் 5. மூங்கில்பாடி 6.குன்னம் 7. பெரியம்மாபாளையம் 8.பெரியவெண்மணி 9. கொளப்பாடி 10. காடூர் 11. எழுமூர் 12. அந்தூர் 13. வரகூர் 14.புதுவேட்டக்குடி ஊராட்சி ஆகிய 14 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **வேப்பூர் கிழக்கு, வேப்பூர் மேற்கு, வேப்பூர் தெற்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**வேப்பூர் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **அழகு. நீலமேகம்,** பெரம்பலூர் மாவட்டம்.
**வேப்பூர் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **தி. மதியழகன்,** பெரம்பலூர் மாவட்டம்.
**வேப்பூர் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **சி. ராஜேந்திரன்,** பெரம்பலூர் மாவட்டம்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 28.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.